DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 46/2021

Prosecution side witness for P.W.20

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திரு. ரமேஷ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.07.2025.**

A1 to A4 are present.

முதல்விசாரணை:–

நான் கடந்த 17,18 வருடங்களாக கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் திரவியம் முடநீக்கியல் மற்றும் எலும்பு சிகிச்சை மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.09.2013 அன்று நான் பணியில் இருந்தபோது, திரு. ராஜலிங்கம் 23 வயது ஆண் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்து பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம் எண்.1 – வலது கண் புருவத்திலிருந்து வலது காது பகுதி வரைக்கும் 6 செ.மீ தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 2 - வலதுகாதின் பின்புறம் 4 செ.மீ அளவில் காணப்பட்டது.

காயம் எண். 3- வலது தோள்பட்டையின் பின்புறம் 8 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 4- வலது முன்னங்கையில் மேல்பகுதியில் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 5- இடது முன்னங்கையில் நடுப்பகுதியில் சுற்றி வரும் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 6 – இடது கை 4,5 விரல்பகுதிகளில் 2 செ.மீ மற்றும் 3 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 7- இடது கையில் முதல் விரல் இடுக்குப்பகுதியில் 8 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 8- வலது முன்னங்கையில் நடுப்பகுதியில் பின்புறம் வெளிப்புறமாக மேலும் முன்புறம்உள்புறமாக வரும்வகையில் 8 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 9- இடது கை 4வது விரல் இடைப்பகுதியில் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காயங்களில் 5,6 காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளேன். மற்றவை சாதாரண காயங்கள் ஆகும். அவருக்கு அதே தினம் ஏறக்குறைய துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்த இடது கை மறுபடியும் பொருத்தும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இடது அல்னா எலும்பிற்கு உள்ளே கம்பி கொடுக்கப்பட்டது. இடதுகையில் அல்னார் நரம்பு துண்டுப்பட்டதை இணைக்கும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. பின்னர் 05.09.2013 அன்று இடது கை பெருவிரல் பகுதி கெட்டுப்போன பகுதி அகற்றப்பட்டு அவருக்கு சதை கடன் வாங்கி போடும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. அதன்பிறகு 01.11.2013 அன்று கடன் வாங்கி போட்ட சதையை சிறிதாக்கும் அறுவை சிகிச்சைக்கும், தோல் கடன் வாங்கி போடும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. 06.02.2014 அன்று இடது கை பகுதியில் சுத்தம் செய்யப்பட்டு தையலிடப்பட்டது, கெட்டுப்போன பகுதி அகற்றப்பட்டது. 03.04.2014 அன்று இடதுகை 4வது விரலில் கீழ்பகுதி கெட்டுப்போன எலும்பு அகற்றப்பட்டது. அதன்பின்பு பலமுறை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். 29.04.2014 அன்று இறுதியாக வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். அதற்காக நான் வழங்கிய காயச்சான்று அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ- 15** ஆகும்.

அதே நாளில் செல்வி.சிவசக்தி 21 வயது பெண் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்து பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம் எண். 1 – பின்னந்தலையில் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 2 – தலையின் வலதுபுறம் 4 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 3 – முன்தலைப்பகுதியில் 4 செ.மீ மேலும் 3 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 4 – தலையின் வலதுபுறம் 4 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 5 – மூக்கின் வலதுபுறம் 4 x 2 x 1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 6– மேல் மற்றும் கீழ் உதடு பகுதியில் வலதுபுறம் 4 x 2 x 1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 7– கழுத்தின் முன்புறம் 3x 2 x 1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 8– வலது தோலின் வெளிப்புறம் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

காயம் எண். 9– வலது மேற்கையில் நடுப்பகுதியில் வெளிப்புறமாக 4 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.
காயம் எண். 10 – வலது முன்கையில் கீழ்புறத்தில் ஒரு சிறிய தையலிட்ட காயம் காணப்பட்டது.
காயம் எண். 11 – வலது நடுவிரல் பகுதியில் 2 x 2 x 1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
காயம் எண். 12 – வலது மோதிர விரல்பகுதியில் 2x 2 x 1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.
காயம் எண். 13 - இடது உள்ளங்கை பகுதியில் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.
காயம் எண். 14- இடது கேபுலா எலும்பு பகுதியில் 6 செ.மீ அளவில் தையலிட்ட காயம் காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காயங்களில் 1,2,3,5,6,13 காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளேன். மற்றவை சாதாரண காயங்கள் ஆகும். அவருக்கு 19.09.2013 அன்றே காயங்கள் அனைத்துமே சுத்தம் செய்யப்பட்டு தையல் போடப்பட்டது. இடது கை பகுதியில் அறுபட்ட அசைவு நரம்புகள் மறுசிரமைப்பு செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்து 25.09.2013 அன்று வீட்டிற்கு அனுப்பப்பட்டார். அதன்பிறகு பலமுறை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் 23.02.2014 அன்று இறுதியாக வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். அதற்காக நான் வழங்கிய காயச்சான்று என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ- 16** ஆகும். மேற்படி காயங்கள் சா.பொ.6,7,8 ஆன அரிவாள் மற்றும் கம்பு போன்ற ஆயுதங்களால் அவரை மாறி மாறி தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (1 முதல் 3 எதிரிகள்தரப்பில்)</u>

காயம்பட்டவர்கள் என்னிடம் எந்த ஆயுதங்களால் தாக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் இல்லை, அதற்கான குறிப்புகள் இல்லை.

<u>குறுக்குவிசாரணை (4 எதிரிதரப்பில்)</u>

மேற்படி 1 முதல் 3 எதிரிகள்தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 46/2021

Prosecution side witness for P.W.21

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.முத்துராஜ் பானுகோபன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.07.2025.**

A1 to A4 are present.

முதல்விசாரணை:–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், கோவங்காடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2013 ஆம் வருடம் தூத்துக்குடி கோரம்பள்ளம் பகுதி -2 கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது கிராம உதவியாளராக மு.கருப்பசாமி என்பவர் பணிபுரிந்து வந்தார். கடந்த 08.10.2013 அன்று மதியம் 2.30 மணியளவில் நான் பணியில் அலுவலகத்தில் இருக்கும்போது முத்தையாபுரம் காவல் ஆய்வாளர் அவர்கள் அழைத்தன்பேரில் முத்தையாபுரம் காவல்நிலையம் சென்று அவருடன் அத்திமரப்பட்டி ரோடு, ஜெஎஸ் நகர் இசக்கியம்மன் கோவில் அருகே வைத்து செல்வராஜ் என்பவரை விசாரிக்க வேண்டும் என்பதற்காக என்னை அழைத்தன்பேரில் அவருடன் அங்கு போனோம். ஜெ ஜெ நகர் இசக்கியம்மன்கோவில் அருகே வைத்து எதிரி செல்வராஜ் என்பவரை முத்தையாபுரம் காவல்நிலைய ஆய்வாளர் கைது செய்தார். அவர் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியுள்ளார். அவரை சாட்சி அடையாளம் காட்டுகிறார். அவரை கைது செய்து விசாரித்தார்கள். விசாரிக்கும்பொழுது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், கிராம உதவியாளர் முன்னிலையிலும் ஆய்வாளர் எழுதிக்கொண்டார். தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய சவுக்கு கம்பை எடுத்து தருவதாக கூறினார். அதன்பேரில் அனைவரும் அத்திமரப்பட்டி மேற்கு தெரு மேற்குபக்கம் உள்ள வயக்காட்டு ஓரத்தில் முட்புதரில் சவுக்கு கம்பை மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆய்வாளரிடம்

கொடுத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அப்போது மணி 4.30 முதல் 5.00 மணி இருக்கும். அதற்கான அத்தாட்சி என்னிடம்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-17** ஆகும். அவர் எடுத்து ஆஜர் செய்த சவுக்கு கம்பு என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். எதிரி செல்வராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி என்னிடம்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-18** ஆகும். அதிலும் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளோம். ஆய்வாளரும், எதிரி செல்வராஜும் கையொப்பம் செய்துள்ளனர். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (1 முதல் 3 எதிரிகள்தரப்பில்)</u>

முத்தையாபுரம் காவல்நிலையத்திற்கும் அத்திமரப்பட்டிக்கும் கூப்பிடும் தூரமா அல்லது ½ கி.மீ தூரமா என்றால் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். அங்கு எத்தனை தெருக்கள் உள்ளது என்றால் தெரியாது. அத்திமரப்பட்டி என்பது ஒரு பஞ்சாயத்து என்றால் சரிதான். அதற்கு கிராம நிர்வாக அதிகாரி தனியாக கிராம நிர்வாக அதிகாரி உள்ளாரா என்றால் நான்தான் பொறுப்பு கிராம நிர்வாக அதிகாரி. நான் அங்கு எத்தனை வருடம் பணிபுரிந்தேன் என்றால் ஒரு வருடமாக பணிபுரிந்தேன். ஆய்வாளர் விசாரிக்கும்போது ஆய்வாளர் என்னை செல்போனில் கூப்பிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆய்வாளரை நான் எந்த இடத்தில் சந்தித்தேன் என்றால் சம்பவ இடத்தில் சந்தித்தேன். ஆய்வாளர் எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று சொன்னார் என்றால் சரிதான். அங்கே ஏற்கனவே 2 வது எதிரியும், ஆய்வாளரும் காவல்துறையினரும் இருந்தார்கள் என்றால் சரிதான். சுற்றிலும் நிறைய வீடுகள் அந்த இடத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் கூட்டம் கூடினார்களா என்றால் இல்லை. சவுக்கு கம்புக்கு குறிப்பிட்ட அடையாளம் உண்டா என்றால் இல்லை. எதிரியை காவல்நிலையத்தில் வைத்துக்கொண்டுதான் அ.சா.பொ.8 ஐயும் காவல்நிலையத்தில் வைத்துக்கொண்டு என்னை ஆய்வாளர் அங்கே அழைத்து ஏற்கனவே எழுதி வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார்கள் என்றாலும், நான் அரசு ஊழியர் என்பதால் போலீசாருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (4ம் எதிரிதரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.